**அனுப்புதல்:**

தலைவர்,
சுங்கர அள்ளி ஊராட்சி
கடத்தூரா ஊராட்சி ஒன்றியம்.

**பெறுதல்:**

திரு. மோகன் & K.சரவணன்,
4B குப்புசாமி சாலை,
கோட்டை தருமபுரி டவுன்,
தருமபுரி மாவட்டம்-636701

**ந.க.எண்:01/2023/ஊ** **நாள்: 12.02.2024**

**பொருள்:** மனைப்பிரிவு - தருமபுரி மாவட்டம் - கடத்தூர் ஊராட்சி ஒன்றியம் சுங்கரஅள்ளி ஊராட்சி - சுங்கரஅள்ளி கிராம சர்வே எண்.170/2A1 ஆகியவற்றில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு சாலை மற்றும் ஊராட்சி பொது உபயோக பகுதிக்கு ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்துள்ளது - இறுதி ஒப்புதல் வழங்க கோருதல்- தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை(நிலை) எண்.78. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(3) துறை நாள்:04.05.2017.
2. அரசாணை(நிலை) எண்.17,. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ4(30) துறை நாள்: 13.10.2017.
3. தருமபுரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண;. IVVGWEIT/2023/TCP/07.11.2023.
4. திரு. K.மோகன் & K.சரவணன. க.எண.4B குப்புசாமி சாலை கோட்டை தருமபுரி டவுன், தருமபுரி மாவட்டம். 15.11.2023

------------

தருமபுரி மாவட்டம் கடத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சுங்கரஅள்ளி ஊராட்சி சுங்கரஅள்ளி கிராமத்தில் சர்வே எண். **170/2A1.** ஆகியவற்றில் திரு. K.மோகன் & K.சரவணன். 4B குப்புசாமி சாலை கோட்டை தருமபுரி டவுன் தருமபுரி-636701 தருமபுரி மாவட்டம் என்பவர்கள் 1 ஏக்கர் நில பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு பார்வை 3-ன் படி வரைபட அனுமதி ம.வ./ந.ஊ.து.இ (த.ம) எண்.114/2023 என என்னிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தொழில்நுட்ப அனுமதியில் தெரிவித்துள்ளவாறு மனைப்பிரிவுகளில் அமைக்கப்படவுள்ள வழிப்பாதை நிலம் மற்றும் உள்ளாட்சிக்கான பொது உபயோக இடம் 24.84 ச.மீ சுங்கரஅள்ளி ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் பெயருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவை அங்கீகரித்தும் ஆணை வழங்குமாறு பார்வை 4-ல் காணும் கடித்தில் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து அசல் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது.

மேலும் பார்வை 1 மற்றும் 2- ல் காணும் அரசாணைகளின் படி கீழ்கண்டவாறு கட்டணம் செலுத்தப்பட்டது.

**வீட்டு மனைகள் விவரம்**

| வ.எண் | மனை எண்கள் | ஒரு மனை செலுத்த வேண்டிய கட்டணம் | மொத்த மனை செலுத்த வேண்டிய கட்டணம் | மொத்த மதிப்பீட்டில் செலுத்த வேண்டிய தொகை(3%) |
|---|---|---|---|---|
| 1 | 17 | 1000 | 17000 | 96593 |

தொகை செலுத்த வேண்டியது - 17000
ஆய்வுக்கட்டணம் - 1000
மொத்த மதிப்பீடு(3219750-ற்கு 3%
செலத்த வேண்டியது - 96593
--------------
மொத்தம் 114593
--------------

எனவே சுங்கரஅள்ளி கிராம சர்வே எண் 170/2A1 0.40.50 ஹெக்டர் (1) ஏக்கர் நில பரப்பில் அமைக்கப்பட்ட 17 மனைகள் கொண்ட புதிய குடியிருப்பு மனை பிரிவினை குடியிருப்பு உபயோகத்திற்காக மட்டும் பயன்படுத்தி கொள்ள இம்மனை பிரிவுக்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. தருமபுரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு மனைகள் மற்றும் தெருக்கள் வரையறுக்கப்படுவதுடன், மனைக்குள் வரும் அனைத்து தெருக்களும் சரளைகற்களால் மனுதாரர்களால் தரைமட்டத்திற்கு உயர்த்தி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அகலத்திற்கு அமைக்க வேண்டும்.
2. மனைப்பிரிவுகளில் அமையும் மணையின் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சி செயல் அலுவரிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
3. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கபட்டுள்ள இடங்களில் கட்டிடங்கள் கட்ட நேரிட்டால் ஊராட்சி செயல் அலுவலரின் பரிந்துரையுடன் தருமபுரி மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கு பிறகு தான் கட்டிடம் கட்ட முன் வர வேண்டும்.
4. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தாங்களே ஒப்படைக்க வேண்டும்.

5. சுங்கரஅள்ளி ஊராட்சி செயல் அலுவலரிடமிருந்து மனைபிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஊராட்சியின் உத்திரவு எண் குறிப்பிட்டு விளம்பர பலகை வைக்க வேண்டும்.

6. தானபத்திரத்தில் ஊராட்சிக்கு எழுதி ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் எவ்வித கட்டுமானங்களோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது.

7. மனைப்பிரிவுகளில் மின்வாரிய விதிமுறைகளின்படி நடப்படும் மின் கம்பங்களுக்கு உரிய தொகையினை கணக்கிட்டு தாங்களே மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டும் அல்லது ஊராட்சிக்கு செலுத்தி பிற்கால பராமரிப்பிற்கு ஈடு செய்யவேண்டும். அதன் பின்னரே மேற்காணும் இடங்களில் ஊராட்சியின் மூலம் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலோ அல்லது தொழில் நுட்ப ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள வரைபடத்தில் உள்ளவாறு அல்லது மாறுதல்கள் இந்தாலோ செயல் அலுவலரால் வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

9. மனையின் உரிமையாளர் மேற்படி நிபந்தனைகளுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அனுமதி (Executive authrority) உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரத்தின் பகுதியாக சேர்த்து தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

10. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். இதில் எவ்வித மாற்றமும் இருத்தல் கூடாது. இவைகளை மீறி செயல்பட்டதாக பிற்காலத்தில் தெரியவந்தால் தாங்கள் மீது நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்
சுங்கரஅள்ளி ஊராட்சி
கடத்தூர் ஒன்றியம்

தலைவர்
சுங்கரஅள்ளி ஊராட்சி,
கடத்தூர் ஒன்றியம்.

**நகல்:**
1.மாவட்ட நகர், ஊரமைப்பு உதவி இயக்குநர் தருமபுரி.
2.சார்பதிவாளர் கடத்தூர்.
3.வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கடத்தூர்.